# காக்காய்க்கும்   காக்காய்க்கும்  கல்யாணமாம்

மாணவியர்  : காக்காய்க்கும் காக்காய்க்கும்
கல்யாணமாம்
கானக் கருங்குயிலு
கச்சேரியாம்!

மாணவர்கள்  : கண்ட கண்ட பக்கமெல்லாம்
அழைப்புகளாம்
காலம் தெரிஞ்சுக்கிட
குறிப்புகளாம் (காக்)

மாணவியர் : வீட்டுக்கு வீடு
விருந்துகளாம்
வில்லு வண்டிக் கூண்டுமேலே
ஊர்வலமாம்

மாணவர்கள்: பழங்களும் விதைகளும்
பரிசுகளாம்-அதன்
பரம்பரை மொழியிலே
வாழ்த்துகளாம்!

எல்லோரும்: காக்காய்க்கும் காக்காய்க்கும்
கல்யாணமாம்
கானக் கருங்குயிலு கச்சேரியாம்!

மாணவியர் : ஒற்றுமையில்லாத
மனிதரைப்போல்-அது
ஒண்ணைஒண்ணு கொத்திகிட்டு ஓடலையாம்!

மாணவர்கள்: உயர்வு தாழ்வு என்று பேதம் பேசிக்கிட்டு
ஒதுங்கி வாழ இடம் தேடலையாம்
ஒதுக்கி வாழ இடம் தேடலையாம்! (காக்)

மாணவியர் : அதிகமாகச் சேத்துகிட்டு
அல்லும் பகலும் பாத்துக்கிட்டு
இருப்பவங்க போலே நடக்கலையாம்!

மாணவர்கள்: நல்ல இதயத்தை மாத்திகிட்டு

ஈயாதவன் போல

கதவைத்தான் சாத்திகிட்டுச்
சாப்பிடலையாம்!

மாணவியர் : வரிசை தவறாமே
குந்திக்கிட்டுதாம்
வந்ததுக்கெல்லாம் இடம்
தந்திக்கிட்டு தாம்!

மாணவர்கள்: மனிதனைக் கேலி
பண்ணிக் கிட்டுதாம்-அவன்
வாழ்க்கையில் கோணலை
எண்ணிக்கிட்டுதாம்!

எல்லோரும்: காக்காய்க்கும் காக்காய்க்கும் கல்யாணமாம்!
கானக் கருங்குயிலு
கச்சேரியாம்

**ஆசிரியர் மாணவர்களுடன் கீழ்க்கண்ட கலந்துரையாடலை மேற்கொள்ளலாம் :**

- திருமணத்திற்கு/கல்யாணத்திற்குச் சென்றிருக்கிறாயா?
- திருமனதிற்குரிய  ஆரம்பநிலை ஏற்பாடுகளைப் பற்றி கூறு ?
- திருமணத்தன்று நடைபெறும்   நிகழ்வுகள் பற்றி கலந்துரையாடல்.
- காகத்தின் அடிப்படைக் குணங்கள் யாவை ?
- காகங்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியவை யாவை ?